Regd. No. M. 4593.    KUDI ARASU    8 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.    தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5    சனி வெளியீடு.

இலை 18 }    சனி,    17-2-1945    மாசி-மீ 6உ    { மலர் 19

## தற்காலப் பிரச்சினை

பெரியார் ஈ. வெ. ரா.
(பிரசண்ட விகடனுக்கு எழுதியது)

["தம் மனதில் உண்மையென்று படக் கூடிய விஷயங்களைச் சமய சந்தர்ப்பம், தயா தாட்சண்யம் முதலியவற்றைப் பார்க்காமல் மிகவும் தைரியமாக எடுத்தும் சொல்லுபவர் பெரியார் ஈ. வெ. ரா. அவருடைய பிரசங்கம் எவ்வளவு தெளிந்த நடையோடும் உணர்ச்சி யூட்டக் கூடியதாகவும் இருக்கிறதோ, அதே போல அவருடைய கட்டுரையும் அமைந்திருப்பதைக் காணலாம். ஜாதி சமயப் பிரிவினைகளை வேரறுத்து, ஒவ்வொருவனும் தன்மதிப்போடு தானும் மனிதன் என்று தலைநிமிர்ந்து நடக்க இக்கட்டுரை வழிகாட்டட்டும்!"] (பி. வி.)

தற்காலப் பிரச்சினை திராவிட மக்கள், இந்துக்கள் என்னும் தலைப்புக் கொண்ட கூட்டத்திற்குள் இருப்பதா அல்லது அதைவிட்டு விலகி வெளி வந்து, தங்கள் இனம், நாடு, இன நலன், நாட்டு நலன் தெரியும்படியான தலைப்புடையவர்களாகி அன்னிய ஆதிக்கத்திலும் சுரண்டலிலும் இருந்து விடுபடுவதா என்பதேயாகும்.

உண்மையாகச் சொல்லுகிறேன். திராவிட மக்கள் இன்று தங்கள் முற்போக்குக்கும், விடுதலைக்குமாக முதலில் கவனிக்கவேண்டியது தங்கள் நாட்டினுடையவும், இனத்தினுடையவும் ஆன பிரச்சினையே ஒழிய, அரசியல் பிரச்சினை அல்ல. நமக்கு இன்னும் அரசியல் பிரச்சினையைப் பற்றிப் பேசும்படியான தகுதி ஏற்படவில்லை. ஆரியர்களைப் போலவோ முஸ்லிம்களைப் போலவோ நமக்குள் அரசியல் பிரச்சினைக்கேற்ற ஒற்றுமையும், தகுதியும், திட்டமும் இன்றுவரை இல்லவே இல்லை.

ஆரியர்களுடைய அரசியல் பிரச்சினை ஆரிய ஆதிக்கமுள்ள இந்துசட்டப்படி, மனுமாந்தாதா, இராமன் கொள்கைப்படி ராஜ்ஜிய பாரம் நடைபெற வேண்டியதேயாகும். மற்றப்படி நாட்டை எவன் ஆண்டாலும் அவர்களுக்கு அக்கறையில்லை. தங்கள் இஷ்டப்படி, தங்கள் நலனுக்கு ஏற்றவண்ணம் எவன் ஆட்சி நடத்துவானோ அவனை இருத்தி வைப்பதும் மற்றவனை ஒழித்துவிடுவதுமே அவர்களுடைய புராண காலம் முதற்கொண்டு நடந்து வந்த கொள்கையாகும். இராமாயணக் கதை இந்த நீதியைப் புகட்டுவதேயாகும். இந்து தேச சரித்திரமும் இதைப் பெரிதும் மெய்ப்பிக்கும். இதற்கேற்ற ஒற்றுமையும், ஒன்றுபட்ட உணர்ச்சியும், கட்டுப்பாடும் அவர்களிடம் உண்டு. ஆதலால் இன்றைய நிலையில் பிரிட்டிஷார் கூட அல்லாமல் ஜப்பானியரோ, ஜெர்மானியரோ-என்-அராபியரோ, ஆப்பிரிக்கரோ இந்நாட்டைக் கைப்பற்றிவிட்ட போதிலுங்கூட, அவர்களிடம் தங்கள் நலனுக்குக் கேடில்லாமல் (ஆரிய மதத்தில் பிரவேசிப்பதில்லை என்பதாக) நடப்பதாகவாக்குறுதி வாங்கிக்கொள்ளுவார்கள். அல்லது அப்படி வாக்குறுதி கொடுக்காதவனையோ; கொடுத்த வாக்குறுதியைத் தவறுபவனையோ விரட்டிவிட்டு வேறொருவனை அழைத்துவந்து வாக்குறுதி வாங்கிக்கொண்டு ஆட்சியில் அமரவைப்பார்கள். இந்தச் சக்தி அவர்களுக்கும், அதுவே கொள்கையாக அவர்கள் மதத்திற்கும், அதற்குத் திட்டமாக அவர்களது புராண இதிகாசக் கதைகளுக்கும் இருக்கின்றன.

அதுபோலவே முஸ்லிம்களுக்குள் பெரிதும், பாக்கிஸ்தான் பிரச்சினை இந்துமத ஆட்சியை விட்டு மீண்டு கொள்ளுவதும், தங்கள் இஸ்லாம் கொள்கைக்கு ஏற்ற ஆட்சியே நடைபெறவேண்டும் என்பதுமாகும். அதற்கேற்ற மதமே அவர்களது மதமாகும். அதற்குத்தகுந்த ஒற்றுமையும் கட்டுப்பாடும் அவர்களிடம் உண்டு.

ஆனால் திராவிடர்களுக்கு அதுபோல் என்ன இருக்கிறது? திராவிடர்களுக்கு நாட்டில் 100க்கு 5 பேருக்குக் கூடத் தாங்கள் திராவிடர்கள் என்றோ தங்கள் நாடு திராவிட நாடு என்றோ தெரியாது. தென்னாட்டவர்களை வடநாட்டார் தங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றோ, தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றோ கருதுகிறவர்கள் வெகு வெகு அருமையே யாகும்.

தென்னாட்டவர்களில் தானாகட்டும், திராவிடர்களில் தாங்கள் திராவிடர்கள் என்றும், தங்கள் நாடு திராவிட நாடு என்றும், தங்கள் நாட்டில் ஆரிய சமயமும், ஆரிய புராண இதிகாச காவியங்களும் வந்து தங்கள் நிலையைக் குலைத்து, தங்களை ஆரிய அடிமைகளாகவும், முஸ்லிம்களாகவும், கிறிஸ்தவர்களாகவும், கீழான ஜாதியாராகவும், தீண்டாதாராகவும் செய்துவிட்டதாக (திராவிடர்களில்) எத்தனை பேருக்குத் தெரியும்? இந்த நிலையில் திராவிடர்கள் தங்களுக்கு அரசியல் கொள்கையாகவோ திட்டமாகவோ எதைக் கருத முடியும்? முதலாவது திராவிடர்களிடையில் ஆரியர்கள் போலவோ முஸ்லிம்கள் போலவோ சமுதாயத்திலும், சமயத்திலும் ஒன்றுபட்ட உணர்ச்சியும், தாங்கள் யாவரும் ஒன்றே என்ற ஒற்றுமையும் குறித்துக் காட்ட, காரியத்திற்கு தொண்டாற்றக் கட்டுப்பாடும் இருப்பதாக யாராவது கூறமுடியுமா? ஆரியர்கள் போலவோ, முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள் ஆகியவர்கள் போலவோ திராவிடர்களுக்கு ஒரு பொதுஸ்தாபனம் எங்கே யிருக்கிறது? ஆரியர்களுக்கு ஆரியதர்ம சபை, முஸ்லிம்களுக்கு முஸ்லிம் லீக், கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவர்கள் சங்கம் (கிறிஸ்டியன் அசோசியேஷன்) இருக்கின்றன.

திராவிடர்களுக்கோ என்றால் அந்தந்த ஜாதியின்பேரால், அதாவது வடம வப்பிராமணர் சங்கம், அக்னிகுல க்ஷத்திரியர் சங்கம், வன்னியகுல க்ஷத்திரிய சங்கம், வணிக வைசிய சங்கம், நகரத்தா வைசிய சங்கம், தொண்டை மண்டல வேளாளர் சங்கம், கார்காத்தவேளாளர் சங்கம், கொங்கு வேளாளர் சங்கம், முக்குலத்தார் சங்கம், நாடார் மகாஜன சங்கம், செங்குந்தர் சங்கம், பேரிசெட்டியார் சங்கம், 24 மனை வைசியர் சங்கம், ஆரிய வைசிய சங்கம், நாயுடு சங்கம், பலிஜ நாயுடு சங்கம், கம்ம நாயுடு சங்

கம், வெலம நாயுடு சங்கம், காபு நாயுடு சங்கம், கொல்ல நாயுடு சங்கம், நாயர் சமாஜம், தீயர்யோகம், புலையர் சங்கம் (இன்னும் பல கூறலாம்.) இப்படியாகச் சின்னாபின்னப்பட்டு, பல ஜாதிகளும் தங்களைப் பல இனங்களாகக் கருதிக் கொண்டு, ஒருவருக்கொருவர் கொடுக்கல் வாங்கல் இல்லாமலும், உண்பன தின்பன தண்ணீர் குடித்தல் முதலியவைகள்கூடத் தடுக்கப்பட்டும், கட்டுக் கலைந்து நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்துக் கொட்டியது போல் தனித் தனியாய் இருக்கிறோம்.

இதனால்தான் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தபோது,

"இன்றைய நிலையில் நமக்கு சுயராஜ்ஜியம் வந்தால் இன்றைய ஆட்சி போல ஆளும் ஜாதியார் தான் ஆளுவார்களே தவிர நம்போன்ற அடிமை ஜாதியார் அடிமைகளாகவே, ஆளப்படுபவர்களாகவேதான் இருப்போம். ஆதலால் சுயராஜ்ஜிய ஆட்சி இன்றைய ஆட்சியை விட மேலானதாக இருக்க முடியாது." என்று சொன்னார். அதாவது ஒற்றுமையும், கட்டுப்பாடும் உள்ள ஜாதிதான் எந்தச் சுயராஜ்ஜியத்திலும் ஆட்சி புரியும் என்றும், அதில்லாத மக்கள் எப்படிப்பட்ட சுதந்திர ராஜ்ஜியத்திலும் ஆளப்படும் அடிமை ஜாதியாகத்தான் இருக்கவேண்டியதாகும் என்றும் அருமையாகச் சொன்னார்.

இந்த நிலையில் சென்னை மாகாணத்தில் உள்ள 4 கோடிக்கு மேம்பட்ட திராவிட மக்களது பிரச்சினை அரசியலைப் பற்றியதா நாடு சமயம் சமுதாயத்தைப் பற்றியதா என்று சிந்திக்க வேண்டுகிறேன்.

ஆகவே, நாம் வடநாட்டை விட்டுப் பிரியாவிட்டால் நமக்கு நாட்டுணர்ச்சி எப்படி உண்டாகும்? அதுபோலவே நாம் ஆரிய சமயப் பிடியிலிருந்து விலகாவிட்டால் நமக்கு இன உணர்ச்சி எப்படி வரும்? நாம் வருணாசிரம ஜாதிப் பிரிவுத் தன்மையிலிருந்து வெளிப்படாவிட்டால் நமது இழிவு எப்படி நீங்கும்? மேலும் நாம் எல்லோரும் ஒன்று, சமம் என்கின்றதான உணர்ச்சி எப்படி வரும்?

இவைகள் நடந்தால்தானே நாம் உலகில் ஒரு மதிக்கத் தகுந்த சமுதாயமாகவும், நம்முடைய அரசியலை நாமே கற்பித்துக் கொள்ளுபவர்களாகவும் ஆக முடியும்?

இன்று திராவிடர்கள் பலர் காங்கிரசில் இருந்துகொண்டு தங்களுடைய நாடு இந்தியா என்றும், தங்கள் சமுதாயம் இந்து (மத) சமுதாயம் என்றும் சொல்லிக்கொண்டு, தங்களை உயர்ந்த ஜாதியாகவும், மற்றவர்களைத் தாழ்ந்த ஜாதியாகவும் அதாவது வேறுபட்டவர்கள் போலவே கருதி வருகிறார்கள். தங்கள் இந்தியர்களாகவும் இந்துவாகவும் இருப்பதால், மற்ற நாட்டாரால் ஆதிக்கம் செலுத்திச் சுரண்டப்படுபவர்களாகவும், கீழ்ஜாதியார் (சூத்திர)ராக இருப்பதைச் சிறிதும் லட்சியம் செய்யாதவர்களாகவும் இருக்கிறார்கள். இனப் போராட்டமான இக்காலத்திலும் தந்தம் சுயநலத்திற்கும், பதவிக்கும் பயனனுபவிப்பதற்குமாகவே திராவிடர்களில் வெகு பேர் தாங்கள் அடையும் இழிவைக் கவனியாமல் இந்தியன் இந்து என்று சொல்லிக்கொண்டு, 'பாரதமாதாவுக்கு ஜே!' என்கிறார்கள். எவ்வளவு நாணயம், ஒழுக்கம் கெட்டவர்களானாலும் அவர்கள் வடநாட்டார்களாய் இருந்தால் (திராவிட நாட்டார் அல்லாதவர்களாய் இருந்தால்) அவர்களைக் கடவுளர்களாகவும், மகான்களாகவும், ரிஷிகளாகவும், தலைவி தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் கருதுகிறார்கள். மற்றும் சிலரில் இப்படிப்பட்டவர்கள் எவ்வளவுதான் அறிவுள்ளவர்களானாலும் ஜாதிவகுப்புப் பேதத்தை விடுவதென்றாலோ, ஜாதி உயர்வைக் கைவிடுவதென்றாலோ நடுங்குகிறார்கள். திராவிடர்களில் மற்றும் பலர் தங்கள் இனத்தைப் பற்றியும் இழிவைப் பற்றியும் கவலையில்லாமல் மதம் என்பதன் பேரால் தங்களை எவ்வளவு வேண்டுமானாலும் தாழ்த்திக்கொண்டு அடியேன், நாயேன், தாசன், அடிமை என்று சொல்லிக்கொண்டு தங்களை இழிவுபடுத்திச் சுரண்டுகிற சாஸ்திரம், புராணம், கடவுள், உற்சவம், பண்டிகை, கருமம் முதலியவைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். இவர்களுக்கு அரசியல் இவர்கள் மதத்தைப் பற்றியதாகத்தான் இருக்க முடியுமே ஒழிய இவர்கள் நாட்டையோ இனத்தையோ பற்றியதாக எப்படி இருக்கமுடியும்?

ஆதலால் நாம் இன்று அரசியலை மறந்துவிடவேண்டும். ஏனெனில் அரசியல் காரணமாக அநாவசியமாய் நமக்குள் பிளவுகள் உண்டாகின்றன. நாம் சமுதாயத்தில் 'மேல்' ஜாதியானால் அனுபவிக்கும் இழிவையும் கீழ்மையையும் விடப் பயனற்ற அரசியலைப் பிரமாதமாய்க் கருதவும், அதற்கு ஆக நமக்குள் போட்டி ஏற்பட்டு, பகைமை உண்டாக்கிக் கொண்டு, ஒரு கூட்டம் பிறவி எதிரிகளாகிய மஞ்சள் ஆரியருக்கு அடிமையாகிப் பதவி பெறவும், மற்றொரு கூட்டம் அவர்களோடு பதவியில் போட்டி போட வியாபார வெள்ளை ஆரியருக்கு அடிமையாகிப் பதவி பெறவும் முயற்சிக்க வேண்டியதாக ஆகிவிடுகிறது. சமுதாயத் துறையில் அரசியலை மறந்து ஆரியரோடு போர் தொடுத்தால் சமுதாய இழிவு தானாக நீங்கிவிடும். பொருளாதாரத் துறையில் அரசியலை மறந்து வடநாட்டாரோடு போர் தொடுத்தால் சுரண்டல் நீங்கிவிடும். இந்த இரண்டும் நீங்கினால் வெள்ளை ஆரியன் ஆதரிப்பார் அற்று ஓடிவிடுவான்.

இந்த நாட்டில் உள்ள பார்ப்பனர் ஆரியரும், திராவிடரும் கலந்த பிறவியாகும். ஆனாலும் கொள்கையில், நடையில் ஆரியர்களே ஆவார்கள். எதுபோல் என்றால் நம் ஆங்கிலோ—திராவிடர்களைப் போல் அவர்கள் ஆரிய—திராவிடர்கள் ஆவார்கள். எப்படி ஆங்கிலோ—திராவிடர்கள் திராவிடத்தாய் வழியில் வந்தவர்களானாலும் அவர்களது கொள்கை சமயம் நடைமுறை ஆங்கிலேயர்களுடையதாய் இருக்கின்றனவோ அதுபோல், இந்நாட்டுப் பார்ப்பனர்கள் திராவிடத்தாய் வழியில் வந்தவர்களானாலும் அவர்களது கொள்கை சமயம் நடைமுறை ஆரியர்களுடையதேயாகும். அவர்களும், அதாவது, தங்கள் நலனுக்கு ஆங்கிலேயரை நம்பியிருப்பதைப் போல், ஆரிய திராவிடர்களும் தங்கள் நலனுக்கு ஆரியர்களை நம்பி, இவர்களும் ஆரிய வெற்றிக்கு உழைக்கிறார்கள். அன்றியும் பிரிட்டிஷாரும், ஜெர்மானியரும் ஆரியர்கள் என்றிருப்பதால் இந்த ஆரிய திராவிடர்கள் சமயம் வரும்போது நாம் வெற்றி அடைவதைவிடப் பிரிட்டனோ, ஜெர்மனியோ வெற்றி அடைவதைத்தான் விரும்புவார்கள். இவைகளைப் பார்க்கின்றபோது இன்று நாம் நம்மைப் பலமும், ஒற்றுமையும், கட்டுப்பாடும், தகுதியும் உள்ள ஒரு சமுதாயமாக ஆக்கிக் கொள்ள வேண்டியதையே தற்கால முக்கியப் பிரச்சினையாகக் கொள்ளவேண்டும். அதில்லாமல் அரசியலை முக்கியப் பிரச்சினையாகக்கொண்டோமேயானால் ஒரு நாளும் இந்த (ஆரிய) மதமொழிந்த—அதாவது—வருணாசிரமமும், ஜாதிபேதமும், பிறப்புத்தொழில் முறையும் அற்ற அரசியல் உரிமை நமக்குவரும் என்று கனவுகூடக் காணமுடியாது. ஆங்கிலேயருக்கும், இந்துமதமும், ஜாதிபேதமும், பிறப்புத்தொழில் முறையும், அதனால் ஏற்படும் இனச்சண்டையும், இந்து-முஸ்லிம் மதச்சண்டையும் இருந்தால்தான் தங்கள் ஆட்சியும் சுரண்டலும் நடக்குமே ஒழிய, இல்லாவிட்டால் நடக்காது என்பது நன்றாய்த்தெரிந்து, அதன்மூலம் நல்ல பலன் அடைந்து வருகிறார்கள். ஆதலால் இரண்டு ஆரியர்கள் (ஐரோப்பிய ஆரியரும், இந்து ஆரியரும்) தங்களுக்குள் ராஜியாவதன்மூலம் பெறும் சுதந்திரம் நமக்குப் பலனளிக்காது.

—"பிரசண்ட விகடன்"

---

15-12-44ந்தேதி கோவை மருத்துவர் சங்க நிலையத்தில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் சி. கே. சுப்பையா தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ., (ஹானர்ஸ்) அவர்கள் அக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார்.

## திருச்சி மிராசுதாரர்கள் மாநாடுகள்

### தோழர் ந. அர்ச்சுனன் தலைமை தாங்கினார்

திருச்சி ஜில்லா மிராசுதாரர் மாநாடு திருச்சியில் சென்ற 5-2-45-ந் தேதி பழயகோட்டை இளையகுமார பட்டக்காரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. டாக்டர் எட்வர்டு மதுரம் தமது வரவேற்புரையை நிகழ்த்தினார். தமது சொற்பொழிவில் நெல் கொள்முதல் விஷயமாக சர்க்கார் கையாளுமுறையில் உள்ள கஷ்டங்களை விளக்கினார்.

மருதூர் தோழர் கே. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் மாநாட்டைத்திறந்து வைத்தார்.

தலைவர் தோழர் அர்ச்சுனன் அவர்கள் தமது தலைமையுரையை நிகழ்த்தினார். இந்நாட்டின் விவசாய நிலைமையையும் மேல்நாட்டின் விவசாய நிலைமையையும் இரண்டுக்கும் உள்ள வேற்றுமையையும், நம் நாட்டின் விவசாய அபிவிருத்திக்கு நாம் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றியும், கால்நடை வளர்ப்புப் பற்றியும் விளக்கினார்.

தானியக் கொள்முதல் சம்பந்தமாக சர்க்கார் அனுஷ்டிக்கும் முறையை மாற்றவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தியும், தானியங்களை களத்திலிருந்து அப்புறப் படுத்தாததால் ஏற்படும் நஷ்டத்தை சர்க்காரார் ஈடுசெய்யவேண்டுமென்றும், இன்னும் இது சம்பந்தமாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் ஷை மாநாட்டின் கன்வீனர் தோழர் எம். ஆர். சந்திரன் அவர்களால் வந்தனோபசாரம் கூற மாநாடு முடிவுற்றது.

## 1945-ஆம் ஆண்டு யுத்தத்தின் தோற்றம்

★

பெரும்போர்கள்
மகத்தான இரத்தவெள்ளம்
எண்ணற்ற போர்க்கைதிகள்

★

எனவே,
செஞ்சிலுவை சங்கம், எப்பொழுதையும்விட உங்கள் உதவியை நாடுகிறது.

"செஞ்சிலுவை"
என்று குறிப்பிட்டு

**மே. த. கவர்னர்**
**யுத்த நிதிக்கு**
உடனே பணம்கொடுத்துதவுங்கள்

## மாணவர் சொற்போர் போட்டி

வருகிற மார்ச்சு மாதம் இரண்டாவது வாரத்தில், ஈரோட்டில் கோவை ஜில்லா திராவிடர் கழகத்தின் ஆதரவில், பன்னீர்செல்வம் நாகம்மாள் நினைவாக சொற்போர் போட்டி நடத்துவதென்றும், அதில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 25 பெருமான வெள்ளிக் கிண்ணமும், இரண்டாவது பரிசாக ரூ. 15 பெருமானமுள்ள வெள்ளிக்கிண்ணமும் அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்போட்டியில் கலந்து கொள்ளும் திராவிட மாணவர்கள் அவர்கள் படிக்கும் பள்ளித் தலைவர்களிடமிருந்து மாணவர் என்பதற்கு அத்தாட்சி பெற்று வரவேண்டும். தேதி, இடம் முதலியவைகள் பின்னர் அறிவிக்கப்படும். ஷை போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் 'என். ஆர். சந்தானம், காரியதரிசி, கோவை ஜில்லா திராவிடர் கழகம், ஈரோடு' என்ற முகவரிக்கு எழுதவும்.

பி. பழனிச்சாமி,
என். ஆர். சந்தானம்,
காரியதரிசிகள்.

## "திராவிடநாடு"

நமது "திராவிடநாடு" அச்சகத்தில் சில முக்கியமான மாறுதல்கள் செய்ய வேண்டியிருப்பதால் 18, 25-2-45 ஆகிய இரண்டு வாரங்களுக்கும் 'திராவிடநாடு' வெளியிடுவதற்கில்லை, வாசகர்கள் பொறுத்துக்கொள்க.

இங்ஙனம்,
மானேஜர், 'திராவிடநாடு'.
13-2-45

## சென்னை இளைஞர் பயிற்சிக் கழகம்

சென்னை இளைஞர் பயிற்சிக் கழகத்தின் ஆதரவில் 25-2-45-ந் தேதி மாலை 6 மணிக்கு 192 தங்கசாலை வீதியில் (கார்ப்பரேஷன் பள்ளிக்கூடம்) "சமுதாயத்தொண்டு" என்பது பற்றி தோழர் இராசரத்தினம் தலைமையில் 'விடுதலை' ஆசிரியர் தோழர் எஸ். குருசாமி பி. ஏ., பேசுவார்.

குடி அரசு

1945 ௵ பிப்ரவரி ௴ 17 ௳

# மகாமகம்

கும்பகோணத்தில் மாமக உற்சவம் நடக்கப் போகிறது அதற்கு திராவிட மக்களை வரும்படியாக கும்பகோணம் பார்ப்பனர்களால் அழைப்புக்கு மேல் அழைப்பு விடுத்தவண்ணமாக விளம்பரங்கள் காணப்படுகின்றன.

பார்ப்பனப் பத்திரிக்கைகள் மாமாங்கத்தைப் பற்றி பிரமாதப்படுத்தி மக்களை அங்கு சேர்ப்பிக்க—தள்ளிவிட முயற்சிக்கின்றன.

இந்த 20-வது நூற்றாண்டுக்குப் பக்கத்தில் வாழும் திராவிட மக்கள் இப்படி ஒரு அறிவும், மானமும் சூன்யமான ஒரு உற்சவத்தை மதித்து கும்பகோணம் சென்று கூட்டைகள் ஆவதென்றால் இதை உலகின் 8வது அதிசயமென்றுதான் சொல்ல வேண்டும். கும்பகோணத்தில் இவ்வளவு கூட்டம் சேர்க்கப்படுவதற்கு மாமாங்கத்தன்று அங்கு என்ன புதிய சங்கதி காணப்படப்போகிறது என்பதை யோசிப்போம்.

அங்குள்ள மாமாங்கக் குளம் என்பது வெகுநாளாக இருந்து வருவதேயாகும். அதில் உள்ள தண்ணீரும் வெகு நாளாக இருந்து வருவதேயாகும். அப்படி இருக்க அன்று (மக நட்சத்திரத்தினத்தன்று) மாத்திரம் அக்குளத்திற்கும் தண்ணீருக்கும் எப்படிப் புது யோக்கியதையோ பெருமையோ உண்டாகிவிடும் என்பதை அறிவுள்ள மனிதன் யோசித்துப் பார்க்க வேண்டாமா? தமிழனின் மதிஈனத்தை முதலாக வைத்து வாழும் பார்ப்பனர் கூட்டம் தங்கள் வாழ்க்கைக்கும் வயிற்றுப் பிழைப்புக்குமாக கதைக் கற்பித்தாலும், தமிழன் அதற்கு அடிமையாவதென்பது இழிவான காரியமல்லவா?

கும்பகோண மாமாங்கத்திற்கு பார்ப்பனர் ஏற்படுத்தி இருக்கும் கதை என்னவென்பது யெவரும் அறியாததல்ல.

அதாவது "சப்த நதிகளும் சிவனிடம் சென்று உலக மக்கள் ரங்கள் தங்கள் பாவத்தைக் கழிப்பதற்கு ஆக தங்களிடம் வந்து குளித்து முழுகிப் பாவங்களை கழுவிவிட்டுக்கொண்டே இருப்பதால் அப்பாவங்கள் தங்களால் சுமக்க முடியவில்லை" என்று அழுதார்கள் அதற்கு சிவன் அந்நதிகளைத்தேற்றி "12-வருஷத்திற்கு ஒரு முறை கும்பகோணத்திற்கு வந்து அங்குள்ள ஒரு குளத்தில் ஒரு தீர்த்தத்தை உற்பத்தி செய்கிறேன் அக்குளத்திற்கு வந்து நீங்கள் குளித்தால் உங்களின் பாபங்கள் அதில் கழுவப்பட்டுப் போகும்" என்றும் சொன்னார். அதற்கு ஆக அந்த நதிகள் அங்குவந்து குளித்து தங்கள் மீதுள்ள பாவங்களை அதில் கழுவி விடுகின்றன. ஆதலால் மனிதர்களும் அன்று வந்து அதில் குளித்தால் அம்மனிதர்களின் பாபமும் அங்கு கழுவப்பட்டுவிடும்" என்பது புராணக் கதை.

இதுதான் மாமாங்கக் கதையின் சுருக்கம்.

இதை எந்த மனிதனாவது நம்ப முடியுமா? மனிதன் உயர்ந்த ஜீவப் பிராணி என்பதற்குக் காரணம் அவனுக்கு உள்ள ஆறாவது (பகுத்தறியும்) அறிவேயாகும். அதாவது சிந்தித்துப்பார்க்கும் தன்மையேயாகும். அப்படிப்பட்ட ஆறாவது அறிவுப்படி பார்த்தால் இந்த மாமாங்கக்கதையை எந்த மனிதனாலாவது நம்ப முடியுமா என்று கேட்கின்றோம்.

ஒருநதியில் ஒருமனிதன் குளித்த மாத்திரத்தில் அவனது பாபம் அதில் கழுவப்பட்டுப் போகும் (தொலையும்) என்பது எப்படி அறிவுக்குப் பொருந்தும் என்பதும், அந்த நதி அந்தப் பாவத்தை சுமக்காமல் சிவனிடம் சென்று அழுவது என்பதும் அதற்கு ஆக (அந்த நதிகளின் பாவபாரம் குறைவதற்கு ஆக) வேறு ஒரு குளத்தைக் கடவுள் சிருஷ்டிக்கிறது என்பதும் அந்தக் குளத்திற்கு இந்த (ஏழு) நதிகள் வருவது என்பதும் ஆகிய சங்கதிகள் மனிதர்களுக்குச் சொல்லக் கூடியவைகளா அல்லது மடையர்கள், மனிதத்தன்மை அற்ற, மனித உருக்கொண்ட, மிருகங்களுக்கும் மரஞ் செடிகளுக்கும் சொல்லக் கூடிய கதையா என்று வாசகர்களை சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

12 வருடத்திற்கு ஒரு முறை அந்தக் குளத்தில் நீர் பொங்கி வருவதாக நேரில் பார்த்ததாகவே சிலர் கூறுகிறார்கள்.

தண்ணீரை நெருப்பில் வைத்துக் காய்ச்சினாலல்லது, பொங்குகிற வஸ்துவை அதில் போட்டாலல்லது தண்ணீர் எப்படிப் பொங்க முடியும்? மாமாங்க தினத்தன்று தண்ணீர் குளத்தில்விட்டுவைத்த அளவுக்குமேல் அதிகமாக காணப்படுவதாக சில பார்ப்பனர்கள் கதை கட்டிவிடுகிறார்கள். மக்களைத் தண்ணீருக்குள் இறங்கவிடாமல் தடுத்து நிறுத்தி பிறகு தண்ணீரைப் பார்த்தால் அப்போது அது பொங்குகிறதா இல்லையா என்பதின் உண்மை கண்டுபிடிக்க முடியும். அப்படிக்கில்லாமல் பதினாயிரக்கணக்கான மக்களை, லட்சக்கணக்கான மக்களை குளிக்கவிட்டு அதன் பிறகு தண்ணீர் அதிகமாகி இருக்கிறது என்று சொன்னால் அதை எப்படி தண்ணீர் என்றே சொல்ல முடியும். குளிக்கப் போகும் மக்கள் அந்தக் குளிரில் தங்கள் சிறுநீரைக் கழிக்க அந்தக் கூட்டத்தில் குளக்கரையில் எங்கு இடம் காணமுடியும்? ஆதலால் குளிக்கிறவர்கள் அவசர அவசரமாகத் தண்ணீரில் இறங்கி அங்கு நீர்கழிக்க ஏற்பட்டு விடுவதன் மூலம் குளத்தின் தண்ணீர் பெருகி இருக்கலாம், அந்த சிறுநீரின் தன்மையால் குளத்தில் குமிழிகள் காணப்படலாம். அன்றியும் மக்கள் ஏராளமாகத் தண்ணீரில் இறங்குவதாலும் தண்ணீர் உயர்ந்து இருக்கலாம். இந்த மாதிரி காரணங்களால் தண்ணீர் மட்டம் 4, 2 படிக்கட்டுகளுக்கு உயர்ந்து விட்டால் அதைப் பொங்கிற்று என்று சொல்லுவது அறிவுடமையாகுமா என்று கேட்கிறோம்.

அன்றியும் சப்த நதிகளுக்குமே தங்களிடம் மக்கள் கழுவிவிட்ட பாபம் தாங்காமல் அங்கு (மாமாங்கக் குளத்திற்கு) வந்து குளித்து பாவங்களைக் கழுவி விட்டுவிட்டுப் போக வேண்டிய அவசிய வந்ததென்றால் பிறகு இந்த ந

கள் கழுவி விட்ட பாபத்தை இந்த மாமாங்கக்குளம் கழுவிவிடவே எந்தக் குளத்திற்கு வருஷத்திற்கு வருஷம் அல்லது 12 வருஷத்திற்கு ஒரு தரமாவது அது சென்றுவந்தது என்று கேட்கின்றோம்.

ஆகவே "எத்தனையோ காலமாக எத்தனையோபேர் கழுவி விட்ட பாபங்களைக் கொண்டு வந்து கழுவி விட்ட" மாமாங்கக் குளப் பாவத்தண்ணீரில் மனிதன் போய் குளிப்பதானால் அவனுக்கு பாவம் ஏறுமா? அல்லது கழியுமா? என்று அறிவுடைய மக்கள் யோசிக்க வேண்டாமா என்று கேட்கின்றோம். எனவே இந்த மாமாங்கப் புரட்டு பார்ப்பனர் பிழைக்க ஏற்படுத்திக் கொண்ட ஒரு சங்கச்சாவடி, கட்டுக்கதை அல்லாமல் இதில் ஏதாவது காரணமோ உண்மையோ அறிவுடமையோ இருக்க இடமிருக்கிறதா? இதற்குப் பார்ப்பனப் பத்திரிக்கை உடயவும் காங்கரஸ்காரர்களுடையவும் விளம்பரம் ஒருபுறமிருக்க காங்கரஸ்காரர்கள் அதைத் தங்கள் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளச் செய்யும் சூழ்ச்சி ஒருபுறம் இருக்க ரயில்வேக்காருடை விளம்பரம் வேறு ஒருபக்கம் இருந்து வருகிறது. இந்த வருஷம் மாத்திரம் "சண்டை நெருக்கடி காரணமாக ரயில்விட முடியாது" என்று சொல்லுகிறார்கள் என்றாலும் அந்த விளம்பரத்தின் மூலம் மக்களுக்கு மாமாங்கத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு தான் வருகிறார்கள். ரயிலுக்கு எப்படியும் சென்ற மாமாங்கத்திற்கு கிடைத்த வரும்படிக்குக் குறையாமல் வரும்படி கிடைக்கத்தான் போகிறது. ரயில்வே சிப்பந்தி பார்ப்பனர்களுக்கும் 'பிரைஸ்' அடிக்கத்தான் போகிறது. மற்றும்பார்ப்பனர்களுக்கு காப்பிக்கடை ஓட்டல், தங்குமிட வசதி, பாட்டுக் கச்சேரி, சினிமா, முதலிய காரியங்களாலும், தர்ப்பணம், சங்கல்ப்பம் முதலியவைகளாலும், மற்றும் பலசிங்காரச்சிற்றின்பக் காரியங்களாலும் இரும்பு, நூல், ஜவுளி வியாபாரிகள் அடித்த கொள்ளை லாபத்தைப் போல் லாபம் கிடைக்கத்தான் போகிறது. கடைசியில் கெட்டு கட்டமடைந்து இழிவடைந்த முட்டாளாக திராவிட மக்கள்தான் ஆகப் போகிறார்கள்.

மற்றும் தன் மனைவி மக்களைஒரு மீட்டிங்கிக்கும் கான்பரன்சுக்கும் அனுப்பக்கூட பயந்து நடுங்கியவனும் உரை போட்டு அறைக்குள் பூட்டி வைத்து பூட்டை இழுத்து இழுத்துப் பார்த்துவிட்டு வெளியில் போய்வருகிறவனும் கூட தன் மனைவி மக்களை மாமாங்கத்திற்குக் கூட்டிக்கொண்டு போய் கூட்டத்தில் சிக்கவைத்து நசுங்குண்டு பஞ்சாமிர்தம் போல் ஆவதைப் பார்த்து "கழுத்து பத்திரம் காது பத்திரம்" என்று மாத்திரம் உரத்திக் கூறிக் கொண்டு இழுத்து வரப்போகிறான் என்பதைத் தவிர மாமாங்கத்தின் முடிவு வேறு என்னமாக இருக்க முடியும்?

இந்த சர்க்கார்மனுதர்ம, புராண ஆட்சி சர்க்காராய் இல்லாமல் இருக்குமானால் இப்படிப்பட்ட முட்டாள்தனமான காரியங்களுக்கு மக்களை ஆளாக்காமல் மாமாங்கம் நடத்தக்கூடாதென்று 144 உத்தரவு போட்டு அதற்குப் பதிலாக ஒரு உலக கண்காட்சியை நடத்தச்செய்து இருக்கும். "மக்கள் மடமையாய் இருக்கும்வரை அரசருக்கும் ஆரியருக்கும் ஆதாயம்" என்கிறது சாணக்கிய கொள்கை; ஆதலால் அறிவு வளர்ச்சிக்கு சர்க்கார் தக்கது செய்யாமல் மாமாங்கம் முதலியவைகளுக்கு ஆதரவளித்து வருகிறது.

எப்படி இருந்தாலும் இந்த மாமாங்கத்திற்கு திராவிட மக்கள் சிறப்பாக தமிழ் மக்கள் செல்லாமல் அதை வெறுத்துத் தள்ளி, போகிறவர்களுக்கும் விவரம் சொல்லி யெவரையும் போகாமல் தடுத்துவிடவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

மாமாங்கத்தலைய நம்புவது கேடு! மதிகேடு!! மதிகேடு!!! என்று சொல்லுவதோடு அங்கு, செல்லுவதும் தமிழ் மகனுக்கு (திராவிடனுக்கு) மானக் கேடு! மானக்கேடு!! மானக்கேடு!!! என்று பலதடவை சொல்லுவோம்.

## விவசாயமும் மிராசுதாரும்

இந்நாடு இன்று விவசாயத்தையே பெரிதும் நம்பி வாழ்கிறது. நூற்றுக்கு 70மக்கள் இதில் ஈடுபட்டிருக்கின்றனர். அதுவும் 200 அல்லது 300 வருடங்களுக்கு முன் எந்த முறையில் விவசாயத்தை நடத்தி வந்தார்களோ அதே முறையிலே இன்றும் நடத்தி வருகிறார்கள். இதை திருச்சியில் சென்ற5-2-45ல் நடைபெற்ற மிராசுதார் மாநாட்டில் தலைமை

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 17-2-45ந் தேதி வரை 28299-அங்கத்தினர்கள்

### ரூ. 2813—15—0 சந்தா

பிப்ரவரி மாதம் 17ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் இரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. தஞ்சை | 4732 | 9. வட ஆற்காடு | 1497 |
| 2. கோவை | 4468 | 10. மதுரை | 1298 |
| 3. சேலம் | 4356 | 11. செங்கல்பட்டு | 563 |
| 4. திருச்சி | 3801 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 168 |
| 5. இராமநாதபுரம் | 1930 | | |
| 6 திருநெல்வேலி | 1884 | 13. இலங்கை | 165 |
| 7. சென்னை | 1700 | 14 பெங்களூர் | 158 |
| 8. தென் ஆற்காடு | 1617 | 15. புதுக்கோட்டை | 59 |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 28299. சந்தா ரூ. 2813-15-0.

வகித்த பழயகோட்டை இளைய குமார பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தமது தலைமையில் நன்கு விளக்கியுள்ளார்கள்.

"200 வருஷத்திற்கு முன்னிருந்த மாதிரிதான் இந்தியாவில் விவசாயம் இருக்கிறது. அதில் நீர் பாய்ச்சல் வசதி, நீர் நிலை, தேக்கம் ஆகியவை ஏற்பட்டு சில நிலங்களுக்குப் புதியதாய் நீர்ப்பாசன வசதி ஏற்பட்டது என்பதல்லாமல் விவசாயத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல் என்ன ஏற்பட்டது? சர்க்காரின் விவசாய இலாகாவானது சில பேருக்கு உத்தியோகத்தைத்தான் கொடுத்தது. அதுவும் விவசாயத்தை தொழிலாகக் கொள்ளாத பரம்பரைக்கே பெரிதும் உத்தியோகமாய் முடிந்தது என்பதல்லாமல் மற்றபடி விளைபொருளில் மாறுதல் இல்லை, விளைவு அளவில் கூடுதல் இல்லை, விவசாய முறையில் மாற்றமில்லை, விவசாயிகள் விளைபொருளின் சரியான விலையை அனுபவிக்க வழியில்லை, விவசாயி விவசாய ஞானம்பெற வழியில்லை" என்று தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

உண்மையிலே இந்நாட்டின் நலனில் கருத்துடையவர்கள், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் ஆர்வமுடையவர்கள், இந்நாட்டு மக்களின் வாழ்க்கை உயர வேண்டுமென்ற நல்லெண்ணமுடையவர்கள் இதை ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. விவசாயத்தில் மாறுதலை உண்டு பண்ணவோ, அதில் முன்னேற்றம் ஏற்படுத்தவோ சாதாரண விவசாயினால் அவ்வளவு எளிதாக எதுவும் செய்ய முடியும் என்று எண்ண முடியாது. மிராசுதார்கள் எண்ணினால், முயன்றால் கண்டிப்பாக மாற்றத்தை யுண்டு பண்ண முடியும். அதனால் தான் தோழர் அர்ச்சுனன் அவர்கள் விவசாயத்தில் ஒரு புரட்சியை யுண்டு பண்ண வேண்டும்; முறையிலே மாற்றம் ஏற்படவேண்டும், உற்பத்தி செய்யும் பொருளிலே மாற்றம் ஏற்பட வேண்டும். அதாவது மக்களின் உணவிலே மாற்றம் செய்ய வேண்டும் என்பதாக வற்புறுத்தியிருக்கிறார்.

அரிசியே உணவாகக்கொண்டுள்ள பலருக்கு ஆத்திரம்வரும். ஆனால் அரிசியினால் உடலுறுதியில்லை, வீண்செலவும் நோயும்தான் மிச்சம் என்பதை அறிவாளர்களேயானால் நம்மீது காயமாட்டார்கள் என்றே நம்புகின்றோம். அரிசியில் சில நோய்கள் உண்டாவதுடன், அதற்கு உபகரணங்கள் அதிகமாக தேவை என்பதையும் யாரும் மறுக்கமாட்டார்கள். நோயுக்கு இடமானதும் வீண் செலவுக்கிடந்தரக் கூடியதுமான அரிசிக்குப் பதிலாக வேறு பொருளை மக்கள் உணவாக ஏற்படுத்திக்கொண்டு நெல்விளையும் நிலத்தில் வேறு விலைமதிப்புள்ள பொருளை பயிர்செய்தால் நாட்டின் செல்வம் உயர்வடையாதா என்று கேட்கின்றோம்.

தாங்கள்தான் இந்நாட்டின் முன்னேற்றத்தில் நலனில் அக்கரையுடையவர்கள் அதற்காகப் பாடுபடுகிறவர்கள் என்று காங்கரஸ்காரர்கள் வீண் பறைசாற்றிவருவதை தோழர் அர்ச்சுனன் அவர்களின் அரிய சொற்பொழிவு பொய்யாக்கி விட்டது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அதோடு, விவசாயப் பொருள்களை அதிலும் குறிப்பாக நெல்லை கொள்முதல் செய்வதில் சர்க்காரார் கையாளும் முறை எவ்வளவு துன்பத்தை விளைவிக்கிறது-எவ்வளவு வெறுப்பைத் தருகிறது என்பதையும் ஷை மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் டாக்டர் எட்வர்டு மதுரம் அவர்களும், திறப்பாளரும் ஆற்றிய சொற்பொழிவில் நன்கு விளக்கியுள்ளார்கள். நெல் அறுவடையான பிறகு வீடுவந்து சேர்வதில் உள்ள கஷ்டங்களை நன்கு விளக்கியுள்ளார்கள். இதற்கு அதிகாரிகள் கையாளுமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும். சர்க்காரர் இதை நன்குணர்ந்து, உணவுப் பொருள் குறைவாக உள்ள இந்நாளில், உணவுப் பொருள் உற்பத்தியில் மக்களுக்கு உண்மையிலே ஊக்கம் பிறக்கும்படி சரியான காலத்தில் தக்கநடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

---

## பெரியார் ஈ. வெ. ரா.
### சுற்றுப்பிரயாணம்.

ஈ. வெ. ரா. அவர்கள், தோழர்கள் E. V. K. சம்பத், மணியம்மையார் ஆகியவர்களுடன் இம்மாதம் இரண்டாம் தேதி ஈரோடு விட்டுப் புறப்பட்டு 3-ந் தேதி பண்ருட்டி, 4-ல் திண்டிவனம், 5-ல் மதராஸ், 6-ல் சேர்ப்பன்தாள், 7-ல் திருவண்ணாமலை, 8-ல் சாமல்பட்டி, 9-ல் அரூர், 10-ல் அதிகாரப்பட்டி, பள்ளிப்பட்டி, 11-ல் பாப்பாரப்பட்டி, 12-ல் பெண்ணாகரம், 13-ல் தர்மபுரி, 14-ல் காவேரிப்பட்டணம், 15-ல் சேலம் ஆகிய இடங்களில் தினம் ஒன்றுக்கு மேற்பட்ட 2, 3 கூட்டங்களில் பேசிவிட்டு திராவிடக் கழகத்திற்கு அங்கத்தினர்களையும் சேர்க்கச் செய்து இயக்கப் புத்தகங்களையும் ஏராளமாய் செலவு செய்துகொண்டு 16-ந் தேதி பகல் 11 மணிக்கு ஈரோடு வந்து சேர்ந்தார்.

மறுபடியும் 17-ந்தேதி பிரயாணமாகி திருச்சி, சென்னை முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு 24 அல்லது 25-உ வாக்கில் ஈரோடு வந்து சேருவார்.

## சர் செல்வம் நாள்

காலஞ் சென்ற தளபதி சர். ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களின் நினைவு நாளை வருகிற மார்ச்சு மாதம் 1-ஆந் தேதி முதல் 7-ஆந் தேதி வரை திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினர் சேர்க்கும் வாரமாக திராவிட நாடெங்குமுள்ள கழகங்களும் பொது மக்களும் கொண்டாடுவார்களாக.

## "நல்ல தீர்ப்பு"

தாம்பரம், சென்னைக் கிறித்தவக் கல்லூரித்தமிழ்ப் பேரவையின் ஆண்டுவிழா 19-2-45 திங்கள் கிழமை மாலை 5.15 மணிக்கு செலையூர் மன்றத்தில் நடைபெறும். அதுசமயம் திராவிட தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் "நல்ல தீர்ப்பு" எனும் பொருள்பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவார்கள். அன்பர்கள் அனைவரும் திரண்டு வருக.

க. துரைஅரசு,
அமைச்சன்.

## பெரியார் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள்

### "இரணியன் அல்லது இணையற்ற வீரன்"

சோர்பாங்கேல் என்ற கிராமத்தில் 6-2-45 அன்று "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற சீர்திருத்த நாடகம் தோழர் செங்கம் மணியக்காரர் தோழர் வெங்கிடாசலம் அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது.

தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நாடகத்தின் அவசியம், மக்கள் நிலை, சமுதாய சீர்திருத்தம், திராவிடநாட்டுப் பிரிவினை முதலியவைகளைப் பற்றி வெகு விளக்கமாகவும், தக்க ஆதாரத்தோடும் நீண்டநேரம் அழகியதோர் சொற்பொழிவாற்றினார்.

### திருவண்ணாமலையில் பொதுக் கூட்டம்

7-2-45-ல் திருவண்ணாமலையில் திராவிட கழகத்தின் சார்பில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுமார் 2000 மக்களுக்கு மேலாகவே வந்திருந்தனர். கூட்டத்திற்கு தண்டாரம்பட்டு சித்தா ரெட்டியார் தலைமைவகித்தார். தோழர்கள் ஈ வெ. கி, சம்பத், மணி, பேரளூர் சுப்ரமணியம் முதலியோர் பேசிய பின் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சேலம் தீர்மானத்தை விளக்கியும் அரசியலார் செய்யும் அநீதியை விளக்கியும் 3 மணி நேரத்திற்கு மேலாகவே நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். வந்தனத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

### அநூரில் சீர்திருத்தத் திருமணங்கள்

9-2-45 காலை 8 மணிக்கு அநூரில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சீரிய தலைமையில் தோழர் ஏகாம்பரத்திற்கும் பொன்னம்மாளுக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

பின் 10 மணிக்கு தோழர் விநாயகம்—குணபூஷனி அவர்கட்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

தோழர்கள் மிட்டாதார் எம். என். கஞ்சப்பா, ஆர். சென்னி செட்டியார், துரைசாமி வேணு, மணி முதலியோர் சொற்பொழிவாற்றினர். பெரியார் அவர்கள் 3 மணி நேரத்திற்கு மேலாகவே திருமணம் என்னும் பொருள் பற்றி சமூக சீர்திருத்தத்தின் தன்மையை நன்றாய் விளக்கிக் கூறினார். பின் வந்தனத்துடன் திருமண நிகழ்ச்சி முடிவுபெற்றது.

### பொதுக் கூட்டம்

மாலை $6\frac{1}{2}$ மணிக்கு ரேடியோ மைதானத்தில் பொதுக் கூட்டம் தோழர் ஆர். சென்னி செட்டியார் தலைமையில் நடைபெற்றது. ஆண்களும் பெண்களும் ஏராளமாகக் குழுமி இருந்தனர்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் அரசியலைப்பற்றியும் திராவிடநாட்டுப் பிரிவினை பற்றியும் நன்றாய் விளக்கி பேசினார். இரவு 10 மணிக்கு வந்தனத்துடன் கூட்டம் முடிவுற்றது.

### பள்ளிபட்டியில் புதுமனைபுகுதல்

10-2-45ந் தேதி காலை 10 மணிக்கு பெரியார் அவர்கள் தலைமையில் தோழர் கானக்கவுண்டர் அவர்கள் புதுமனை புகுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இல்லம் திறந்துவைக்கையில் "தன்மான இல்லம்" என பெரியார் அவர்கள் பெயர் சூட்டினார். கூட்டத்திற்கு பெண்களும், ஆண்களும் சுமார் 500 பேர்களுக்கு மேலாக வந்திருந்தனர்.

---

## சேலம் தெ. இ. ந. உ. சங்கக் கூட்டம்

1945 வருடம் பிப்ரவரி மாதம் 25-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தில் (S. I. L. F) தெ. இ. ந. உ. சங்கம் கீழ்க்கண்ட விஷயத்தை ஆலோசிக்க கூட்டம் கூட்ட தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அங்கத்தினர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

### விஷயங்கள்

1. சேலம் ஜில்லா S. I. L. F. தென்னிந்திய நலவுரிமைச் சங்கமென்றிருப்பதை திராவிடர் கழகம் என்று மாற்றி அமைத்தல்.
2. ஷை திராவிடர் கழகத்திற்கு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்தல்.
3. இன்னும் அங்கத்தினர்கள் கொண்டுவரும் இதர விஷயங்கள்.

ஜி. பி. சோமசுந்தரம், தலைவர்,
சேலம் ஜில்லா.

## வட ஆற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக்கமிட்டிக் கூட்டம்

திருப்பத்தூர், பிப், 11—

4-3-45 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திருப்பத்தூர் முனிசிபல் ஹைஸ்கூலில் நமது ஜில்லாவின் ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் கட்சியின் அபிவிருத்தினைக் கருதி ஆலோசிக்கப்படும்.

நமது ஜில்லாவில் உள்ள கமிட்டி மெம்பர்கள் அனைவரும் இதனையே அழைப்பாகக் கருதி வரவேண்டுகின்றேன்.

ஜி. சாமி நாயுடு பி. ஏ., பி. எல்.,
தலைவர்.

## சேலம் பொன்னம்மாப் பேட்டை திராவிடர் கழகம்

நாங்கள் திராவிட கழகக் கட்டிடம் கட்டுவதற்காக நிலம் வாங்க இருக்கிறோம். அதை ரிஜிஸ்டர் செய்வதற்காக 11 பேர் கொண்ட கமிட்டி நிறுவ 21-2-45-ந் தேதி புதன்கிழமை இரவு 9 மணிக்குக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் இக்கழக உறுப்பினர் யாவரும் தவறாது வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மற்றும் நம் இயக்க அன்பர்கள் பண உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திராவிடர் கழகத்தார்,
பொன்னமாபேட்டை, சேலம்.

## வேண்டுகோள்

ஆரணி தோழர்களுக்கு,

என்னிடம் இரசீது புத்தகம் வாங்கிச் சென்றவர்கள், இரசீது புத்தகங்களையும் கட்டணத்தையும் உடனே தாமதமில்லாமல் அனுப்பிவைக்க வேண்டுமெனக் கோருகிறேன்.

வே. திங்கள் அழகன்,
திராவிட இளைஞர் கழகம், ஆரணி.

---


## தேயிலைகளில் சிறந்தது "ஜே" பிராண்ட் டீ

தினம் 100000 மக்கள் உபயோகிப்பது.

ரூ. 30 சம்பளத்தில் ஏஜண்டுகள் தேவை. விபரம், மாதிரிக்கு 8 அணா போஸ்டல் ஆர்டருடன் எழுதவும்.

தாய்நாடு கார்ப்பரேஷன்
(ரிஜிஸ்டர்டு)
நாங்குனேரி P.O.

## ஊரெங்கும் இதே பேச்சு "வெற்றி"

கட்டுரை, கதை, படம், விகடம் நிறைந்தது.

தனிப்பிரதி 2 அணா. வருடம் ரூ. 2, மாதிரி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்புடன். ஏஜண்டுகள் டிப்பாசிட் ரூ. 10 அனுப்பவும்.

மானேஜர் "வெற்றி"
நாங்குனேரி P.O.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.